## மிக முக்கியமான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் (MITC - எம்.ஐ.டி.சி)

நிறுவனங்கள் சட்டம், 2013-இன் கீழ் ஒருங்கிணைக்கப்பட்டு அதனுடைய பதிவு அலுவலகத்தை 83, முதல் மாடி, பூர்வி மார்க், வசந்த் விஹார், புது தில்லி – 110057-ல் கொண்டுள்ள எவிஓம் இந்தியா ஹவுசிங் ∴பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்டிலிருந்து தனிப்பட்ட கடன் வாங்குபவர்களால் (“கடன் வாங்குபவர்/கள்”) பயன்படுத்திக்கொள்ளப்படும் வீட்டுக் கடனுக்கான (“**கடன்**”) மிக முக்கியமான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் (“**the MITC**” – “**எம்.ஐ.டி.சி**”), இனிமேல் “எவிஓம்” என்று குறிப்பிடப்பட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவைகள் எவிஓம் உடனான கடன் தொடர்பாக செயல்படுத்தப்படும் ஒப்புதல் கடிதம் மற்றும் கடன் ஆவணங்கள் மற்றும் பிற பரிவர்த்தனை ஆவணங்களுடன் (கூட்டாக “**நிதி ஆவணங்கள்**” என்று குறிப்பிடப்படுகிறது) இணைந்து படித்து புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

இங்கே குறிப்பிடப்பட்டுள்ள MITC–கள் (எம்.ஐ.டி.சி-கள்) குறிப்பானவை முழுமையானவை அல்ல. கடன் ஆவணங்களால் கடன் நிர்வகிக்கப்படும். இங்கே அமைக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் கடன் ஆவணங்கள் இடையே முரண்பாடு ஏற்பட்டால், கடன் ஆவணங்களின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மேலோங்கும்.

### a) கடன்

கடன் என்பது கடன் ஒப்பந்தத்தின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள படி வீட்டுவசதி/வீட்டுவசதி அல்லாத கடனைக் குறிக்கிறது. கடனின் விதிமுறைகள், அதனுடைய நோக்கம், பொருந்தக்கூடிய வட்டி விகிதம் மற்றும் கால அளவு ஒப்புதல் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள படி இருக்கும். தயவுசெய்து குறிப்பிட்ட விவரங்களுக்காக கடன் ஒப்பந்தத்தை கவனமாக படிக்கவும். சுய விவரங்களின் கடன் மதிப்பீடு, வருமானம் மற்றும் வழங்கப்படும் பிணையத்தின் மதிப்பீட்டின் அடிப்படையில் கடன் தீர்மானிக்கப்படும்.

i. **வட்டி விகிதம்** - கடனுக்கு பொருந்தக்கூடிய வட்டி விகிதம் உறுதிப்படுத்தப்படும். கடன் காலம் முழுவதும் வட்டி விகிதம் நிலையானதாக இருக்கும். பொருந்தக்கூடிய நிலையான விகிதம் கடன் வழங்கப்படும் தேதியில் நடைமுறையிலுள்ள வட்டி விகிதமாக இருக்கும். இங்கே குறிப்பிடப்பட்டுள்ளவைகளுக்கு மாறாக ஏதேனும் இருந்தாலும், வட்டி விகிதம் நீங்கள் செயல்படுத்தும் கடன் ஒப்பந்தம் மற்றும் ஒப்புதல் கடிதத்தின் விதிமுறைகளிலுள்ள திருத்தங்களுக்கு உட்பட்டது.

ii. **கால அளவு** – கடனின் கால அளவு எவிஓமின் விருப்பப்படி நிர்ணயிக்கப்படும் இது கடன் வாங்குபவரின் வயது, ஆபத்து விவரங்கள், கடன் வாங்குபவரின் சொத்தின் காலத்தைப் பொறுத்தது. கடனின் கால அளவு கடனுக்கான காலத்தில் எந்த நேரத்திலும் எவிஓம் ஆல் அதனுடைய தனி விருப்பப்படி மாற்றப்படலாம்.

iii. **கட்டணம் மற்றும் பிற கட்டணங்கள்** - பின்வரும் கட்டணங்கள் இன்றைய தேதி வரை பொருத்தமானவை மற்றும் www.aviom.in வலைத்தளத்தில் புதுப்பிக்கப்பட்டுள்ள படி அவ்வப்போது மாற்றத்திற்கு உட்பட்டவை.

| கட்டணங்களின் அட்டவணை | | |
|---|---|---|
| **ஐடம்** | **விளக்கம்** | **கட்டணங்கள்** |
| **பொருந்தக்கூடிய திருப்பிச் செலுத்தப்படாத கட்டணங்கள்** | பெறப்பட்ட விண்ணப்பங்கள்/ உள்நுழைவில் | **ரூபாய் 2100 + பொருந்தக்கூடிய வரி** |
| | விண்ணப்பத்தின் அனுமதியில் | |
| | நகர் பாலிகா பட்டா | **LAP - 3.75% + பொருந்தக்கூடிய வரி HL - 2.5% + பொருந்தக்கூடிய வரி** |
| | கிராம பஞ்சாயத்து பட்டா | **LAP - 3.75% + பொருந்தக்கூடிய வரி HL - 2.75% + பொருந்தக்கூடிய வரி** |
| | பணம் வழங்கப்படும் நேரத்தில் | **பொருந்தாது** |
| | 5 லட்சம் வரை | **ரூபாய் 50 + பொருந்தக்கூடிய வரி அல்லது CERSAI மூலம் விதிக்கப்படும் கட்டணங்கள்** |

| | | |
|---|---|---|
| **CERSAI கட்டணங்கள்** | 5 லட்சத்திற்கு மேல் | **ரூபாய் 100 + பொருந்தக்கூடிய வரி அல்லது CERSAI மூலம் விதிக்கப்படும் கட்டணங்கள்** |
| **அறுதியீட்டில் CERSAI கட்டணங்கள் (பிணை உரிமையை நீக்குதல்)** | திருப்தி கட்டணம் | **பொருந்தாது / கட்டணம் கிடையாது** |
| **காசோலை/ACH பவுன்ஸ்** | | **ரூபாய் 400 + பொருந்தக்கூடிய வரி** |
| **செலுத்த வேண்டிய கட்டணத்தை பணமாக வசூலிப்பதற்கான கட்டணங்கள்** | செலுத்த வேண்டிய கட்டணத்தை பணமாக வசூலித்தால் விதிக்கப்படும் | **ரூபாய் 200 + பொருந்தக்கூடிய வரி** |
| **தாமதமாக பணம் செலுத்துவதற்கு தண்டனை வட்டி கட்டணம்** | தாமதமாக பணம் செலுத்தும் நாட்களின் எண்ணிக்கைக்கு தினசரி மாதத்திற்கு கூட்டாக சேர்க்கப்படும் % | **மாதத்திற்கு 2.5% + பொருத்தமானவை** |
| **முன் கூட்டியே பணம் செலுத்துவதற்கான அறிக்கை/ கோரிக்கை** | | 1000 + பொருந்தக்கூடிய வரி |
| **கடன் விதிமுறைகளில் மாற்றம் (கடன் குறைப்பு தவிர)** | | **ரூபாய் 2500 + பொருந்தக்கூடிய வரி** |
| **ஆவணம் மீட்டெடுப்பு** | | **ரூபாய் 1000 + பொருந்தக்கூடிய வரி** |
| **A/C-இன் அட்டவணை மற்றும் அறிக்கை** | | **ரூபாய் 500 + பொருந்தக்கூடிய வரி** |
| **நகல் NOC/நிலுவைத் தொகை இல்லை** | | **ரூபாய் 500 + பொருந்தக்கூடிய வரி** |
| **தேவையான ஆவணங்களின் நகல்** | | **ரூபாய் 1000 + பொருந்தக்கூடிய வரி** |
| **ஆவணங்களின் பட்டியலுக்கான கட்டணங்கள் (LOD)** | | ரூபாய் 1000 **+ பொருந்தக்கூடிய வரி** |
| **கடன் கணக்கு பராமரிப்பு கட்டணங்கள் (AMC)** | **ஒப்புதல் நேரத்தில் ஒரு முறை செலுத்த வேண்டிய முன் பணம்** | ஆண்டிற்கு ரூபாய் 100 அல்லது ரூபாய் 1000 இதில் எது அதிகமாக இருக்கின்றதோ அதன் படி **+ பொருந்தக்கூடிய வரி** |
| **முன் கூட்டியே பணம் செலுத்துதல்***<br><br>***முன் கூட்டியே பணம் செலுத்தும் கட்டணங்கள் முன் கூட்டியே பணம் செலுத்தும் தேதியிலிருந்து கடந்த 12 (பன்னிரண்டு) மாதங்களில் கடன் வாங்குபவரால் செலுத்தப்பட்ட அனைத்து பகுதி பணம் செலுத்துதல் உட்பட "மொத்த நிலுவைத் தொகை" மீது விதிக்கப்படும்.*** | சொந்த ஆதாரங்கள் - LAP (HL–க்கு முன் கூட்டியே பணம் செலுத்தும் கட்டணங்கள் கியைாது) | **10% + பொருந்தக்கூடிய வரி** |
| | HL மற்றும் LAP இரண்டிற்கும் கடன் பரிமாற்றம் / ரத்து செய்தல் | **10% + பொருந்தக்கூடிய வரி** |
| | பணமாக செலுத்தப்பட்டால் பண வசூல் கட்டணம் | ரொக்கமாக 1000 ரூபாய்க்கு ரூபாய் 10 **+ பொருந்தக்கூடிய வரி** |
| மீட்பு/சட்ட கட்டணங்கள் | | **உள்ளபடி** |
| முத்திரை வரி / அடமானத்தை உருவாக்குதல் | அந்தந்த மாநிலங்களில் பொருந்தக்கூடிய உள்ளபடி | **உள்ளபடி** |
| சட்ட மற்றும் தொழில்நுட்ப கட்டணம் | | LA 3.5 லட்சம் வரை -ரூ 3500 (வரிகள் உட்பட)<br>LA 3.5 லட்சத்திற்கு மேல் -ரூ 5500 (வரிகள் உட்பட) |
| தொழில்நுட்ப மதிப்பீட்டு கட்டணம் | | ரூ 500 (உட்படவரிகள் |

| கட்டணங்கள் அட்டவணை | | |
|---|---|---|
| **ஐடம்** | **விளக்கம்** | **கட்டணங்கள்** |
| மீட்பு / பணத்திற்காக பின்தொடர்தல் | ஒரு தொலைபேசி அழைப்புக்கு | **பொருந்தாது** |
| | ஒரு கடிதத்திற்கு | **ரூபாய் 25 + பொருந்தக்கூடிய வரி** |
| | ஒரு வருகைக்கு | **ரூபாய் 250 + பொருந்தக்கூடிய வரி** |
| காசோலை /PDC/ECS ஸ்வப்பிங் | PDC முதல் PDC வரை | **ரூபாய் 750 + பொருந்தக்கூடிய வரி** |
| | PDC முதல் ACH வரை | **பொருந்தாது / கட்டணம் கிடையாது** |
| | ACH முதல் ACH வரை | **ரூபாய் 750 + பொருந்தக்கூடிய வரி** |
| | ACH முதல் PDC வரை | **ரூபாய் 750 + பொருந்தக்கூடிய வரி** |
| பணம் வழங்குதல் ரத்து செய்தல் / எ.கா. ஒப்பந்தம் ஒத்திவைப்பு அல்லது வேறு ஏதேனும் காரணத்திற்காக | பணம் வழங்கப்பட்ட 7 நாட்களுக்குள் கோரிக்கை வந்தால் | **ரூபாய் 1000 + பொருந்தக்கூடிய வரி** |
| | பணம் வழங்கிய 7 நாட்களுக்குப் பின் கோரிக்கை வந்தால் | **ரூபாய் 2000 + பொருந்தக்கூடிய வரி + செலுத்த வேண்டிய முன் EMI எதுவும்** |
| தற்காலிக நகல்/ வட்டி சான்றிதழ் | | **ரூபாய் 500 + பொருந்தக்கூடிய வரி** |
| கூரியர் | | **ரூபாய் 100 + பொருந்தக்கூடிய வரி** |
| காப்பீடு | உள்ளபடி | **உள்ளபடி** |
| ஒரு மதிப்பீட்டிற்கு மதிப்பீடு கட்டணங்கள் | | **செயலாக்க கட்டணத்தில் சேர்க்கப்பட்டுள்ளது** |
| SRO தேடல், ROC தேடல், SRO-யிலிருந்து EC அல்லாதது, SRO-ல் கட்டணம் உருவாக்குதல் | உள்ளபடி | **உள்ளபடி** |
| உள் இருப்பு பரிமாற்றத்தில் பரிவர்த்தனையை கையாளுதல் | | **பொருந்தாது** |
| ஒப்புதல் கடிதம் மறுமதிப்பீடு கட்டணம் | ஒப்புதல் கடிதத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் படி | **ரூபாய் 5000/-** |

**b) கடனுக்கான பிணையம்**

கடனுக்கான பிணையம் பொதுவாக நிதியுதவி வழங்கப்படும் சொத்து / அல்லது எவிஓமிற்கு தேவைப்படக்கூடிய வேறு ஏதாவது இணைப் பிணையம் / இடைக்கால பிணையம் மீதான பிணைய வட்டியாக இருக்கும். பிணையத்தில் உத்தரவாதம், அடமானம், பதிவு மற்றும் எவிஓம் ஆல் பொருத்தமானதாக கருதப்படும் வேறு ஏதாவது வகையான பிணையம் அடங்கும்.

தெளிவான, சந்தைப்படுத்தக்கூடிய மற்றும் எந்த விதமான வில்லங்கமும் இல்லாத உரிமை கொண்டு இணைப் பிணையமாக (அதற்கான விவரங்கள் கடன் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன) வழங்கப்படும் சொத்தின் மீதான முதல் மற்றும் பிரத்தியேகமான கட்டணத்தின் மூலம் கடன் பாதுகாக்கப்படும். கடன் வாங்குபவர் எவிஓமிற்கு தேவைப்படக்கூடிய அத்தகைய உரிமை ஒப்பாவணம், ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளின் அசல்/நகலை வழங்க வேண்டும். குறிப்பிடப்பட்டுள்ள பிணையத்தை உருவாக்குவதற்கு செலுத்த வேண்டிய அனைத்து கட்டணங்களையும் கடன் வாங்குபவர் ஏற்றுக்கொள்ள வேண்டும் மற்றும் அதன் முழுமைக்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். பிணையமாக வழங்கப்படும் சொத்தின் கட்டுமானத்திற்கான திட்டம் தகுதிவாய்ந்த அதிகாரியால் அங்கீகரிக்கப்பட வேண்டும் மேலும் கடனுக்கான காலத்தில் எந்த நேரத்திலும் கடன் வாங்குபவர் அல்லது வேறு எந்த நபரும் இதை மீறக் கூடாது.

**c) சொத்து/கடன் வாங்குபவர்களின் காப்பீடு**

பிணையமாக வழங்கப்படும் சொத்திற்கு எவிஓம் ஒரே பயனாளியாக இருப்பதுடன், இந்தக் கடன் காலத்தில், எவிஓம் ஆல் குறிப்பிடப்படும் தொகைக்கு தீ மற்றும் பிற ஆபத்துக்களுக்கு எதிராக முறையாகவும் சரியாகவும் காப்பீடு செய்யப்பட்டுள்ளதா என்று உறுதிப்படுத்துதல் கடன் வாங்குபவரின் பொறுப்பாகும். அதற்கான சான்று எவிஓம் ஆல் கேட்கப்படும் போதெல்லாம் எவிஓமிடம் வழங்கப்பட வேண்டும். குறிப்பிட்ட நோக்கத்திற்காக எவிஓம் ஆல் குறிப்பிடப்பட்டுள்ள தொகையைப் பொருட்படுத்தாமல், கடன் வாங்குபவர் போதுமான தொகைக்கு சொத்தை காப்பீடு செய்ய முற்றிலும் பொறுப்பானவர் ஆவார்.

கோரிக்கைகள் மற்றும் காப்பீடு உட்பட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அத்தகைய காப்பீடு பாலிசியை வழங்குபவரால் நிர்வகிக்கப்படும். காப்பீடு பாலிசியின் கீழ் எவிஓமின் பங்கு உதவியாளராக மட்டுமே இருக்கும் மற்றும் பாலிசியின் கீழ் எதிர்கால கோரிக்கைகள் எதையும் ஈடுசெய்து தீர்வு காணுவதற்கான முடிவு காப்பீடு நிறுவனத்திடம் மட்டுமே இருக்கும்.

**d) கடன் வழங்குவதற்கான நிபந்தனைகள்**

கடன் வழங்குவதற்கான நிபந்தனைகள் கடன் ஆவணங்களின் கீழ் விவரமாக குறிப்பிடப்படும் எனினும், சில சிறப்பான மற்றும் முக்கியமான நிபந்தனைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

a. ஒப்புதல் கடிதம் / கடன் ஆவணங்களில் எவிஓம் ஆல் குறிப்பிடப்பட்டுள்ளபடி அனைத்து தொடர்புடைய ஆவணங்களையும் சமர்ப்பித்தல்;
b. சொத்தின் சட்ட மற்றும் தொழில்நுட்ப மதிப்பீடு;
c. ஒப்புதல் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடி கடன் வாங்குபவர் சொந்த பங்களிப்பை செலுத்துதல் (கடன் தொகையை கழித்து பிளாட்டின் மொத்த செலவு);
d. கடனின் போதுமான பயன்பாட்டிற்கான ஆதாரத்தை வழங்குதல்;
e. கட்டுமானத்தின் முன்னேற்றம் / தாமதம் தொடர்பான விவரங்கள், சொத்துக்கு ஏற்படக்கூடிய பெரிய சேதங்கள் ஏதேனும், வேலைவாய்ப்பு / தொடர்பு விவரங்களில் ஏற்படக்கூடிய மாற்றங்கள், சொத்து தொடர்பாக செலுத்தப்படாத வரிகள், போன்றவை உட்பட, எவிஓமிற்கு விவரங்களைத் தவறாமல் வழங்க கடன் வாங்குபவர் பொறுப்பேற்றுக் கொள்தல்;
f. பொருந்தக்கூடிய அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களின்படி கட்டுமானம் மேற்கொள்ளப்படுதல்;
g. சொத்து மறுவிற்பனையில் வாங்கப்பட்டிருந்தால் சொத்துக்கு தேவையான அனைத்து ஒப்புதல்களும் பெறப்பட்டுள்ளன மற்றும் அவை விற்பனையாளரிடம் உள்ளன.

கடன் மற்றும் வட்டியை திருப்பிச் செலுத்துதல்

h. கடன் உரிய தேதியில் மாதாந்திர அடிப்படையில் செலுத்தக்கூடிய சமமான மாதாந்திர தவணைகள் (“EMIs” - ஈ.எம்.ஐ-கள் ) மூலம் திருப்பிச் செலுத்தப்படும். EMI–கள் உண்மையில் வழங்கப்பட்ட தொகையில் கணக்கிடப்படும் இது எவிஓமின் விருப்பப்படி திருத்தத்திற்கு உட்பட்டது. மிகச் சரியான EMI–கள் இறுதியாக பணம் வழங்கப்படும் நேரத்தில் கணக்கிடப்படும்.

i. EMI முன் வட்டி ("PEMII") உரிய தேதியில் மாதாந்திர அடிப்படையில் செலுத்தப்பட வேண்டும். இது கடன் குறித்து முதலில் பணம் வழங்கப்பட்ட தேதியிலிருந்து EMI தொடங்கிய தேதி வரை வசூலிக்கப்படும்.

j. பணம் செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டால், தாமதமான காலத்திற்கான தவணை கடந்த வட்டி அவ்வப்போது எவிஓம் ஆல் தீர்மானிக்கப்படும் விகிதங்களில் வசூலிக்கப்படும்.

k. EMI-களைத் திருத்த அல்லது திருப்பிச் செலுத்தும் காலம் அல்லது இரண்டையும் திருத்த எவிஓமிற்கு முழு உரிமை உள்ளது வட்டி விகிதத்தில் ஏற்பட்டுள்ள மாற்றம்/திருத்தத்தின் விளைவாக மற்றும்/அல்லது எவிஓமில் அதன்படி திருத்தப்பட்ட EMI-களுக்கான புதிய பின் தேதியிட்ட காசோலைகளின் ("PDC-கள்") தொகுப்பு வைப்பீடு செய்யப்படும் மற்றும்/அல்லது மாற்ற முடியாத ECS ஆணை உங்களால் வழங்கப்படும்.

l. மேற்கூறப்பட்டுள்ள பொதுவான தன்மையை கட்டுப்படுத்தாமல், கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காக எவிஓம் ஆல் குறிப்பிடப்படும் தொகைக்கு அவ்வப்போது எவிஓம் ஆல் வழங்கப்படும் உத்தரவின்படி அத்தகைய எண்ணிக்கையிலான PDC-களை கடன் வாங்குபவர் வழங்க வேண்டும்.

m. முன்கூட்டியே பணம் செலுத்தும் கட்டணங்கள் - முன்கூட்டியே பணம் செலுத்தும் கட்டணங்கள் பொதுமக்களுக்கு பெருமளவில் வழங்கப்படும் தகவல்களிலிருந்து எவிஓம் ஆல் மற்ற ஒழுங்குமுறை அதிகாரிகள், தேசிய வீட்டுவசதி வங்கியின் ("NHB"- "என்.ஹெச்.பீ") வழிகாட்டுதல்கள் / சுற்றறிக்கைகளுக்கு ஏற்ப விதிக்கப்படும். "தேசிய வீட்டுவசதி வங்கி மற்றும் மற்ற ஒழுங்குமுறை அதிகாரிகளின் வழிகாட்டுதல்கள் / சுற்றறிக்கைகளுக்கு உட்பட்டு, இங்குள்ள மற்றும் / அல்லது கடன் ஆவணங்களின் கீழ் இருக்கும் விதிமுறைகள், கடன் வாங்கியவர் வழங்கப்பட்ட கடனை முன்கூட்டியே செலுத்தலாம் அல்லது பகுதியாக முன்கூட்டியே செலுத்தலாம் (பொருந்தக்கூடிய கட்டணங்களுடன்) அதற்காக முப்பது (30) வேலை நாட்கள் முன்கூட்டியே எவிஓமிடம் தெளிவான எழுத்துப்பூர்வமான அறிவிப்பை வழங்க வேண்டும். எவிஓம் ஆல் அறிவிப்பு பெறப்பட்ட உண்மையான தேதியிலிருந்து முப்பது (30) நாட்கள் கணக்கிடப்படும்.

**e) கடனுக்கான வருடாந்திர நிலுவைத் தொகை ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 30 அன்று வழங்கப்படும்.**

**f) தவணை கடந்த தொகையை மீட்பதற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறையின் சுருக்கமான குறிப்பு**

கடன் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி பணம் செலுத்த தவறினால் ("தவறுதல் ஏற்பட்டால்"), எவிஓமிற்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை முழுவதும் உடனடியாக செலுத்தப்பட வேண்டும் மற்றும் தாமதமாக பணம் செலுத்துவதற்காக தவணை கடந்த கட்டணங்கள் வசூலிப்பது, சட்டத்தின் கீழ் இருக்கும் தீர்வுக்கு ஏற்ப மீட்பு நடவடிக்கைகளுக்கான முழு செலவும் உட்பட பிணையத்தை வலியுறுத்தி நடைமுறைப்படுத்துவதன் மூலம் தவணை கடந்த தொகையை மீட்பது உட்பட ஆனால் இவைகள் மட்டுமே இல்லாமல் கடன் ஆவணங்களின் கீழ் அதற்கு இருக்கும் உரிமைகளை வலியுறுத்தி அத்தகைய தேவையான நடைமுறைகள்/நடவடிக்கைகள் எடுக்க எவிஓமிற்கு உரிமை உள்ளது. ஒவ்வொரு சூழ்நிலைகளையும் பொறுத்து உண்மையான நடைமுறை எவிஓம் ஆல் தீர்மானிக்கப்படும்.

**g) வாடிக்கையாளர் சேவை**

a. அலுவலகத்தில் பார்வை நேரம் - காலை 10:00 மணி முதல் மாலை 6:00 மணி வரை (திங்கள் முதல் சனி வரை). எவிஓம் இந்தியா ஹவுசிங் ∴பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் அலுவலகம் ஞாயிற்றுக்கிழமை மூடப்பட்டிருக்கும்.

b. வாடிக்கையாளர் சேவைக்காக தொடர்பு கொள்ள வேண்டிய நபர்களின் விவரங்கள் - தொடர்பு அதிகாரி

c. காலக்கெடு உட்பட பின்வருவனவற்றை பெறுவதற்கான நடைமுறை:
கடன் கணக்கு அறிக்கை* - 7 வேலை நாட்களுக்குள்.
உரிமை ஆவணங்களின் நகல்* - 15 வேலை நாட்களுக்குள்.
கடனை மூடுவது குறித்து அசல் ஆவணத்தை திருப்பிக் கொடுத்தல்* - 15 வேலை நாட்களுக்குள்.
முன்கூட்டியே பணம் செலுத்துதல* - 10 வேலை நாட்களுக்குள்.

*கடன் வாங்குபவர் கடன் கணக்கு எண் மற்றும் அடையாளச் சான்றை வழங்குவதன் மூலம் நிறுவனத்தின் கிளை அலுவலகத்திலுள்ள தொடர்பு அதிகாரியிடமிருந்து இந்த சேவைகளைப் பெறலாம். மாறாக, கடன் வாங்குபவர் **Customercare@aviom.in** -ல் எங்களுக்கு எழுதலாம்.

குறிப்பு: ஒவ்வொரு சேவை கோரிக்கையையும் வழங்குவதற்கான நேரம் நிறுவனத்தின் விருப்பப்படி மாற்றத்திற்கு உட்பட்டது.

## h) குறைகளுக்கு தீர்வு காணுதல்

நிலை 1

வாடிக்கையாளர் அவருடைய/அவளுடைய புகாரை கிளை அலுவலகத்திற்கு தபால் மூலம் அனுப்பலாம் அல்லது எங்கள் வலைத்தளத்தில் அதாவது www.aviom.in -இன் 'வாடிக்கையாளர் சேவை' பிரிவின் கீழ் எங்களுக்கு எழுதலாம் அல்லது customercare@aviom.in அல்லது connect@aviom.in -ல் எழுதலாம்.

நிலை 2

வாடிக்கையாளர் சேவை மூலம் வழங்கப்பட்ட தீர்மானத்தில் வாடிக்கையாளர் திருப்தி அடையவில்லை என்றால், அவர்/அவள் அவர்களின் புகாரை shashi.chandra@aviom.in.-ல் குறைகளுக்கு தீர்வு காணும் அதிகாரியிடம் பதிவு செய்யலாம்.

நிலை 3

குறைகளுக்கு தீர்வு காணும் அதிகாரி மூலம் வழங்கப்பட்ட தீர்மானத்தில் வாடிக்கையாளர் திருப்தி அடையவில்லை என்றால், அவர்/அவள் அவர்களின் புகாரை Divyani.chand@aviom.in–ல் இணக்க/ நோடல் அதிகாரியிடம் பதிவு செய்யலாம்.

நிலை 4

இணக்க/ நோடல் அதிகாரி மூலம் வழங்கப்பட்ட தீர்மானத்தில் வாடிக்கையாளர் திருப்தி அடையவில்லை என்றால், அவர்/அவள் அவர்களின் புகாரை Satish.bansal@aviom.in–ல் குறைதீர்ப்பாளரிடம் பதிவு செய்யலாம்.

மாறாக, வாடிக்கையாளர்கள் குறைகளுக்கு தீர்வு காணும் அதிகாரியிடம் எழுதலாம்:

**எவிஓம் இந்தியா ஹவுசிங் ஃபைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்,**
**பதிவு அலுவலகம் - வேர்ல்ட்மார்க் 3, யூனிட் 306A, 3வது தளம், அசெட் ஏரியா எண்.**
**7, விருந்தோம்பல் மாவட்டம், டெல்லி ஏரோசிட்டி, இந்திரா காந்தி சர்வதேச**
**விமான நிலையம் அருகில், புது தில்லி-110037**

*குறிப்பு:- தயவுசெய்து உறையின் மேலே 'குறைகளுக்கு தீர்வு காணுதல்' என்று குறிப்பிடவும்.*

நிலை 5

மேற்கண்ட நிலைகளிலிருந்து குறிப்பிட்ட காலத்திற்குள், வாடிக்கையாளரின் திருப்திக்கு ஏற்ப புகாருக்கு தீர்வு காணப்படவில்லை என்றால், வாடிக்கையாளர் கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரியில் தேசிய வீட்டுவசதி வங்கியை அணுகலாம்:

**தேசிய வீட்டுவசதி வங்கி,**
ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வை துறை, (புகார்களுக்கு
தீர்வு காணும் பிரிவு), 4வது மாடி,
கோர் - 5ஏ, இந்தியா ஹபிடெட் சென்டர்,
லோதி சாலை, புது தில்லி - 110003
https://grids.nhbonline.org.in/
www.nhb.org.in

மேற்கண்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் கடன் வாங்குபவரால்/கடன் வாங்குபவர்களால் படிக்கப்பட்டது /கடன் வாங்குபவரிடம் / கடன் வாங்குபவர்களிடம் படித்து காட்டப்பட்டது மற்றும் கடன்

வாங்குபவர்/கடன் வாங்குபவர்களால் புரிந்து கொள்ளப்பட்டது. கடன் வாங்குபவர்/கடன் வாங்குபவர்கள் MITC-இன் (எம்.ஐ.டி.சி) நகலைப் பெற்றுக்கொண்டார்கள் மற்றும் கடன் ஆவணங்கள் மற்றும் ஒப்புதல் கடிதத்தின் கீழ், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைப் புரிந்து கொண்ட பின்னர் நல்ல மனநிலையில் மற்றும் மனப்பூர்வமான சம்மதத்துடன் இந்த ஆவணத்தில் அவர்கள் கையெழுத்திட்டுள்ளார்கள் / பெருவிரல் பதிவை அளித்துள்ளார்கள்.

____________________________________________

கடன் வாங்குபவரின் /கடன் வாங்குபவர்களின் கையெழுத்து

____________________________________________

எவிஓம் இந்தியா ஹவுசிங் ∴பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட நபரின் கையெழுத்து